Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம் 08　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　புரட்டாதி 08　　(24 - 09 - 1992)　　வியாழக்கிழமை　　ஓசை 219

## 3ஆம் உலகில் 20 வீத மக்கள் பட்டினியுடன் உறங்குகின்றனர்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் 20சதவீதமான மக்கள் பட்டினியுடன் படுக்கைக்குச் செல்கின்றனர். 1960 ஆம் ஆண்டிலில் இது 36 சதவீதமாக இருந்தது எனினும் இன்று 78 கோடியே60 இலட்சம் மக்கள் பட்டினிக்கு இலக்காகியுள்ளனர். இதில் 20 கோடி பிள்ளைகள் போசாக்கின்றி அவதியுறுகின்றனர் என ஐக்கிய நாடுகள் உணவு விவசாய ஸ்தாபனத்தின் புதிய அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது இதே வேளை கடந்த இருபது ஆண்டுகளில் உலக மக்கள் தொகை 200 கோடியாக அதிகரித்துள்ளது. அதே வேளை அபிவிருத்திஅடைந்து வரும்நாடுகளில் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை 15 கோடியே 50 இலட்சத்தால்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் கலவரம் பஸ்கள் தீக்கிரை:
# ரயில் நிலையம் மீது தாக்குதல்

## ராம்தாஸ் கைதின் எதிரொலி

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் உட்பட பல தலைவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல பாகங்களில் கலவரங்கள் இடம் பெற்றன. இக்கலவரங்களின் போது பல பஸ்கள் தீக்கிரையாகின. பல கல்வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்தன. ரயில் நிலையம் ஒன்றும் தாக்கப்பட்டது.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன் உட்பட நான்கு தலைவர்கள் திங்கட்கிழமை இரவு மீண்டும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இக் கலவரங்கள் இடம் பெற்றன

திருச்சி, தென்ஆர்க்காடு, தர்மபுரி, செங்கை அண்ணா மாவட்டங்களில் நடந்த வன்முறைகளில் 46 பஸ்கள் கல் எறிந்து தாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுக்குச் சொந்தமான இரண்டு பஸ்களும், தனியார் பஸ்கள் இரண்டும் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் ஆயுதந் தாங்கிய பொலிசாரின் ரோந்து தீவிரப் படுத்தப்பட்டுள்ளது

மேலும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு புகையிரத நிலையமும் நேற்று முன்தினம் அதிகாலையில் தாக்குதலுக்கு உள்ளானது இத் தாக்குதலில் நிலையத் தலைமை அதிகாரி உட்பட மேலும் ஒருவர் காயமுற்றார் இந்தச் சம்பவத்தையடுத்து இப்பாதையினூடான ரயில்வே போக்குவரத்து நான்கு மணி நேரத்துக்கும் மேலாக தாமதமாகியது.

## ராம்தாஸை கைதுசெய்தது முறையான செயலல்ல

– சிவாஜி கணேசன்

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராம்தாஸ் உட்பட ஏனையோர் கைது செய்யப்பட்டிருப்பது முறையல்ல என்றும், அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் தமிழக ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் சிவாஜி கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

## தீவிரவாதிகளைத் தடுக்க மேலும் சோதனைசாவடிகள்

(சென்னை)

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி மற்றும் கிழக்கரை சாலை ஆகியவற்றில் மேலும் இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட இருப்பதாகவும், இதன் மூலம் கரையோரத்தில் தீவிரவாதிகள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும் என்றும் தமிழகப் பொலிசார் கூறியுள்ளார்.

இது பற்றி மேலும் கூறிய காவல்துறை ஆணையாளர் ஜாபர் ஷெரீப் இம் மாவட்டத்தில் இதுபோன்ற சோதனைச் சாவடிகள் பதினொன்று ஏற்கனவே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

## கட்சிகளின் ஆதரவே புலிகள் ஊடுருவ காரணம்

- தமிழக எதிர்க்கட்சித் தலைவர்

(சென்னை)

தமிழகத்தில் ஒரு சில கட்சிகள் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவு கொடுப்பதனாலேயே அந்த இயக்கத்தின் ஊடுருவல்கள் மீளவும் தலைதூக்கியுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் சட்டப்பேரவையில் பேசும்போது குறிப்பிட்டார்.

மதுரையருகே பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியைச் சுட்டுக்கொன்றது புலிகளாகவோ அல்லது அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட ஒருவராகவோ தான் இருக்க வேண்டும் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டிப் பேசினார். அப்படிப்பட்ட புலிகள் இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சியினர் பகிரங்கமாகவே ஆதரவுகொடுத்துவருகிறார்கள் என்றும், அவர்களை நாம் இன்னும் ஆதரிக்க வேண்டுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்

## வாழைச்சேனையில் கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை குருமன் வெளிப்பகுதியில் பொலிசார் மீது கைக்குண்டு வீசப்பட்ட

[4ஆம் பக்கம் பார்க்க]

## நால்வர் கைது

மட்டக்களப்பு நகருக்கு அண்மையாகவுள்ள ஆனைப்பந்தி, மற்றும் சிங்களவாடி கிராமங்களைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரும், பொலிசாரும் கல்லாயாக்கன் தீவுப் பகுதியைச் சேர்ந்த நான்கு பேரைக் கைது செய்துள்ளனர்

சீனித்தம்பி கந்தசாமி (25) சோமசுந்தரம் தங்கவேல் (22)

[4ஆம் பக்கம் பார்க்க]

## திலீபன் மரணித்த நாள் எழுச்சி நாளாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களின் இறுதி நாளான நாளை மறுதினம் தமிழீழம் எங்கும் எழுச்சி நாளாக பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

அனைத்துப்பகுதிகளிலும் அன்றைய தினம் காலை 7-00 மணியளவில் திலீபனின் நினைவாக ஈகைச் சுடர் ஏற்றலுடன் தேசியக் கொடி ஏற்றும் வைபவமும் நடைபெறும். தொடர்ந்து 8-00 மணியளவில் உண்ணா நோன்பு ஆரம்பமாகும்.

திலீபன் தியாக மரணமடைந்த நேரமாகிய காலை 10-48 மணியளவில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு திலீபனின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட இருக்கிறது அனைத்து உண்ணாவிரத பந்தல்களிலும் மாலை 4-00 மணியளவில் உண்ணாவிரத நிகழ்ச்சி பூர்த்தியாகும், இதைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் மாலை 4-30 மணியளவில் நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறும் குடாநாட்டில் வடமராட்சி மாலிச் சந்தி அருகிலும், தென்மராட்சி, நுணாவில் 190 ஆம் கட்டையடியிலும், வலிகாமத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலிலும் அஞ்சலிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவாக இன்றைய சிரமதானபணிகள்

[யாழ்ப்பாணம்]

தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை ஒட்டி இன்றும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் பல சிரமதானப் பணிகள் நடைபெற உள்ளன

கைதடி சி. எம். எஸ். பாடசாலையில் வசிக்கும் மக்களால் மேற்படி பாடசாலையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது அத்துடன் திருநெல்வேலிச் சந்தி துப்புரவு செய்தல், மந்துவில் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை துப்பரவு செய்தல், ஆகிய சிரமதானப் பணிகள் நடைபெற உள்ளது

## திலீபன் நினைவு நிகழ்வுகள்; எங்கும் எழுச்சிக்கோலம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தியாக மரணமடைந்த தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களில் எட்டாவது நாளாக நேற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகள் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் உணர்வு பூர்வமாக நடைபெற்றன.

நேற்றைய அஞ்சலி நிகழ்ச்சிகளாக சுழற்சிமுறை அடையாள உண்ணாவிரதம், தொடர் உண்ணாவிரதம், கலை நிகழ்ச்சிகள், சிரமதானப்பணிகள், இரத்ததான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தை
## புலிகளுடன் நடாத்தும்

## [illegible]
## முறையான செயலல்ல

— சிவாஜி கணேசன்

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராம்தாஸ் உட்பட ஏனையோர் கைது செய்யப்பட்டிருப்பது முறைபல்ல என்றும், அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் தமிழக ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் சிவாஜி கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

## தீவிரவாதிகளைத் தடுக்க மேலும் சோதனைசாவடிகள்

(சென்னை)

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி மற்றும் கீழக்கரை சாலை ஆகியவற்றில் மேலும் இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட இருப்பதாகவும், இதன் மூலம் கரையோரத்தில் தீவிரவாதிகள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும் என்றும் தமிழகப் பொலிசார் கூறியுள்ளார்.

இது பற்றி மேலும் கூறிய காவல்துறை ஆணையாளர் ஜாபர் ஷெரீப் இம் மாவட்டத்தில் இதுபோன்ற சோதனைச் சாவடிகள் பதினொன்று ஏற்கனவே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

நிலையமும் நேற்று முந்தினம் ... கும் மேலாக தாமதமாகியது.

## கட்சிகளின் ஆதரவே புலிகள் ஊடுருவ காரணம்

— தமிழக எதிர்க்கட்சித் தலைவர்

(சென்னை)

தமிழகத்தில் ஒரு சில கட்சிகள் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவு கொடுப்பதனாலேயே அந்த இயக்கத்தின் ஊடுருவல்கள் மீளவும் தலைதூக்கியுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் சட்டப்பேரவையில் பேசும்போது குறிப்பிட்டார்.

மதுரையருகே பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியைச் சுட்டுக்கொன்றது புலிகளாகவோ அல்லது அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட ஒருவராகவோ தான் இருக்க வேண்டும் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டிப் பேசினார். அப்படிப்பட்ட புலிகள் இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சியினர் பகிரங்கமாகவே ஆதரவுகொடுத்துவருகிறார்கள் என்றும், அவர்களை நாம் இன்னும் ஆதரிக்க வேண்டுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்

## இன்றைய சிரமதானபணிகள்

[யாழ்ப்பாணம்]

தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை ஒட்டி இன்றும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் பல சிரமதானப் பணிகள் நடைபெற உள்ளன

கைதடி சி. எம். எஸ். பாடசாலையில் வசிக்கும் மக்களால் மேற்படி பாடசாலையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது அத்துடன் திருநெல்வேலிச் சந்தி துப்புரவு செய்தல், மந்துவில் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை துப்பரவு செய்தல், ஆகிய சிரமதானப் பணிகள் நடைபெற உள்ளது

## திலீபன் நினைவு நிகழ்வுகள்; எங்கும் எழுச்சிக்கோலம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தியாக மரணமடைந்த தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களில் எட்டாவது நாளாக நேற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகள் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் உணர்வு பூர்வமாக நடைபெற்றன.

நேற்றைய அஞ்சலி நிகழ்ச்சிகளாக சுழற்சிமுறை அடையாள உண்ணாவிரதம், தொடர் உண்ணாவிரதம், கலை நிகழ்ச்சிகள், சிரமதானப் பணிகள், இரத்ததான

(4 ஆம் பக்கம் பார்க்க)

சந்தி அருகிலும், தென்மராட்சி, நுணாவில் 190 ஆம் கட்டையடியிலும், வலிகாமத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலிலும் அஞ்சலிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியில் பெரும்பான்மையோர் விரும்பின் பதவி விலகத் தயார்

— சிறிமாவோ அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தலைமைப் பதவிக்கான போட்டி ஒரு புதிய திருப்பத்தை எடுத்திருக்கிறது தலைமைப் பதவியிலிருந்து தான் விலகவேண்டும் என்று கட்சியில் பெரும்பான்மையினர் விரும்பினால் தான் அவ்வாறே செய்யத் தயாராக உள்ளதாக 76 வயதான முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமய அல்லது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள செய்தித்தாள்கள் கேட்டுக் கொள்வதால், தான் தலைமைப் பதவியை விட்டு விலகப்போவதில்லை, கட்சியில் பெரும்பான்மையினர் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நான் விலகவேண்டும் என்று கோரினால், பதவி விலகத்தயார் என்றார் அவர்.

செய்தித்தாள் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே சிறிமாவோ இவ்வாறு கூறியிருக்கிறார்.

## விசேட இணைப்பு

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் வர்ணப்படம் உள்ளே இணைக்கப்பட்டுள்ளது.

## புலிகளுடன் நடாத்தும் நோக்கம் எதுவுமில்லை

— ரணில்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தும் நோக்கம் எதுவும் அரசுக்குக் கிடையாது என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

பாராளுமன்றக் கட்டடத்தில் நேற்று நடந்த நிருபர்கள் மகாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார். தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. கே. ரணசிங்கா, தகவல் துறைப் பணிப்பாளர் ஆகியோரும் நிருபர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

(சமாதானப் பேச்சுவார்த்தை)

## மாணவர் உணவு முத்திரை செயலகம் வந்துள்ளது

[யாழ்ப்பாணம்]

1991 செப்டம்பர் மாதத்திற்குரியதும் 1992 ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் யாழ்- செயலகப் பகுதிக்கு வந்துள்ளன.

இவற்றை ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவினருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை சமூகசேவைப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கான ஆதரவை ராம்தாஸ் கைவிட வேண்டும்

— வாழப்பாடி

(சென்னை)

புலிகளுக்கு வழங்கும் ஆதரவையும், பிரிவினைக் கோஷத்தையும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைமை கைவிட வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே ராமமூர்த்தி கோரியிருக்கிறார்.

அண்மையில் இந்தக் கட்சி சென்னையில் நடத்திய மாநாட்டில் எழுப்பிய தன்னுரிமைக் கோரிக்கை பிரிவினையைத் தூண்டுவதாக அமைவதோடு, அக்கட்சியைத் தடை செய்யும் அளவுக்குச் சென்றுவிட்டது என்றும் சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய வாழப்பாடி தெரிவித்தார்.

## கிளாலிப் படகுகளை நோக்கி இராணுவத்தினர் வேட்டு

கிளாலிப்பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் படகோட்டி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் 12.00மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலின் போது வல்லிபுரம் மாம்பழம் (வயது 29) என்பவர் தலையில் காயமடைந்துள்ளார். (க) (பா)

## இராணுவத்தின் வேட்டுக்கு தமிழிளைஞர் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

சில்லாலைப் பகுதியில் வாழைக்குலை வெட்டச் சென்ற வாலிபர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் மேற்படி பகுதிக்கு தனது தந்தையாருடன் வாழைக்குலை வெட்டச் சென்ற

[4ஆம் பக்கம் பார்க்க]

(சில்லாலைப் பகுதியில்)

## ராணுவ கொமாண்டோக்கள் பொலிசாரால் கைது

சி. ஐ. டி எனக் கூறி கொள்ளுப்பிட்டி ஹோட்டல்ஒன்றை நள்ளிரவுநேரத்தில் சோதனையிட முயன்ற இரண்டு இராணுவக் கொமாண்டோக்கள் உட்பட மூன்று பேரைப்பொலிசார் கைது செய்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பிரேமதாஸா பாரியாருடன் பாகிஸ்தான் சென்றார்

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவும் அவர் பாரியாரும் இஸ்லாமாபாத் சர்வதேச விமான நிலையத்தை நேற்றுச் சென்றடைந்தார்கள்.

பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான், திருமதி இஷாக்கான் ஆகியோர்விமான நிலையத்தில் சிறிலங்கா ஜனாதிபதியையும் அவரது பாரியாரையும் வரவேற்றார்கள்.

சார்க் நாடுகளுக்கான விஜயத்தின் ஆரம்பக்கட்டமாகவே ஜனாதிபதி பிரேமதாஸா பாகிஸ்தான் சென்றுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்குச் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டு இராணுவ மரியாதையும் அளிக்கப்பட்டது ஜனாதிபதி பிரேமதாஸா பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் இராணுவ மரியாதையைப் பார்வையிட்டார்.

அரச விருந்தினர் மாளிகைக்கு ஜனாதிபதி பிரேமதாஸா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவை மாதகல், இளவாலை விஜயம்

மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் நேற்று விஜயம் செய்தனர்.

இப்பகுதிகளில் இராணுவத்தினரிடம் சிக்கிய பொதுமக்களை இவர்கள் பார்வையிடுவார்கள்என்று அறியவருகிறது

## அவசரகாலச் சட்டத்தை நீக்க 'ஏசியாவோச்' கோரிக்கை

(ஒஸ்லோ)

அமெரிக்காவிலிருந்து செயற்படும் மனித உரிமை ஏஜென்சியான ''ஏசியா வோச்'' சிறிலங்கா அரசுக்கு விடுத்துள்ள பகிரங்க வேண்டுகோள் ஒன்றில் அவசரகாலச் சட்டத்தை விலக்குமாறும், இச் சட்டத்தில் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்குமாறும், பத்திரிகையாளர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணைகள் நடாத்துமாறும் கோரியுள்ளது.

'ஏசியா வோச்' வெளியிட்டுள்ள இவ் அறிக்கை ''சிறிலங்காவில் மனித உரிமைகள்'', ''கருத்துச் சுதந்திரத்தின் பறிப்பு'', ''மனித உரிமைகள் செயற்பாட்டு இலக்கு'', ''பலவந்தமாக ஆட்கள் கடத்தப்படுதல் பற்றிய கமிசனின் அறிக்கை'', ''விசேட அதிரடிப் படையும், மனித உரிமைகளும்'', ''கொக்கட்டிச் சோலை படுகொலை பற்றிய அறிக்கை'', ''பொலிஸ் அமைப்பில் புனரமைப்பு மற்றும் சீரமைப்பு'', ''அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் தேவைகள்'' என்பன போன்ற பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் முடிவுகளின் அடிப்படையில்வெளியிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## ஐரோப்பிய நாணயக் குழப்பம்; 3-ம் உலக உதவித்திட்டம் பாதிப்பு

### உலக வங்கி எச்சரிக்கை

ஐரோப்பாவில் இப்போது நிலவும் நாணய மதிப்புக் குறித்த குழப்பத்தால் வளரும் நாடுகளுக்கான உதவித்திட்டம் பாதிக்கப்படும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது

வங்கியின் வளர்ச்சிக் குழுவின் கூட்டத்துக்குப் பிறகு வாஷிங்டனில் பேசிய உலக வங்கியின் நிர்வாக இயக்குநர், ஆனூஸ்கான் ஐரோப்பாவிலுள்ள உதவி வழங்கும் நாடுகள் தங்களது வரவு செலவுத் திட்டம் குறித்து மீண்டும் பரிசீலிப்பதாகக் கூறினர்.

பொருளாதார வகையில் பின்தங்கிய வளரும் நாடுகளுக்குக் கிட்டத்தட்ட வட்டியில்லாக் கடனை வழங்கும் சர்வதேச வங்கி அமைப்புக்களுக்கான நன்கொடை வாய்ப்புக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

## வரி விளம்பரம்


**கடிகாரமா? றேடியோவா?**

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5044)

**கலர்ப் புகைப்படங்கள்**

எங்கள் ஸ்ரூடியோவில் யாழ் பட்டமளிப்பு விழாக் கலர்ப் படங்கள் எடுத்தவர்களின் படங்கள் தயாராக வுள்ளன. அவற்றை எடுத்துச் செல்லும் படி அன்புடன் கேட்கின்றோம். ஞானம்ஸ் ஸ்ரூடியோ. (சி/5095)

**பனை ஒலைச்சார்வு**

பனை ஒலைச்சார்வு வாங்குகிறோம். - மில்க்வைற் (சி-5099)


## உடப்பு சுற்றிவளைப்பு 10 தமிழ் இளைஞர் கைது

(உடப்பு)

புத்தளம் மாவட்டத்தில் உடப்பு தமிழ்க் கிராமத்தை சுற்றி வளைத்து சோதனையிட்ட சிறிலங்கா பொலிசார் பத்துப் பேரை மேல் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்

கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 4.00 மணி முதல் 7.00 மணி வரை இக்கிராமத்தில் முந்தல், உடப்பு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் நூறு பொலிசார் தேடுதல் நடவடிக்கையில் கூட்டாக ஈடுபட்டனர்.

வடமாகாணத்தில் இருந்து அண்மைக் காலமாகப் பெருந்தொகையானோர் உடப்பு கிராமத்திற்குள் ''ஊடுருவி'' இருப்பதாக பொலிஸ் உயர் மட்டத்திற்கு கிடைக்கப் பெற்ற தகவலைத் தொடர்ந்து இந்த தேடுதல் வேட்டை இடம் பெற்றதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வீடு வீடாக நடை பெற்ற தேடுதலில் சுமார் 350 பேர் ஓரிடத்திற்கு கொண்டுவரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்றும் உள்ளூர்வாசிகள் வீடு போக அனுமதிக்கப்பட்டனர் என்றும்,

முல்லைத்திவு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்துப் பேர் மேல் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது


SPOKEN ENGLISH BY: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்

**27-9-92**

(10 மணி)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-5091]


மைலந்தனை படுகொலை

## அடையாள அணிவகுப்பு மீண்டும் ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

மைலந்தனையில் ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி 35 தமிழ் குடிமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்று புதன்கிழமை நடை பெறுவதாக இருந்த அடையாள அணிவகுப்பு மீண்டும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற ஏற்பாடாகி இருந்தது. பொலிசார் சமர்ப்பித்த மனுவொன்றைத் தொடர்ந்து மீண்டும் இந்த அணிவகுப்பு ஒத்திவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மலேசிய இளைஞர் மீது தீவிர விசாரணை

(கொழும்பு)

மலேசிய தொழிற்சங்க காங்கிரசின் இளைஞர் பிரிவுத் தலைவர் கே பிரபாகரன் கடந்த வெள்ளியன்று இரவு கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கியபோது அங்குள்ள அதிகாரிகளின் நீண்ட விசாரணைக்கு உள்ளானதாக தெரியவருகிறது.

தோற்றத்திலும், உருவ அமைப்பிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் சாயலை இவர் ஒத்திருந்ததே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் தலைவருக்கு உறவு முறையா? புலிகளுடன் தொடர்பு உண்டா? என்று அதிகாரிகள் இவரை பல மணிநேரம் கேள்விகள் கேட்டு குடைந்தனராம்.

இந்த மலேசிய இளைஞர் குழு இ. தொ. கா. மலேசிய தொழிற்சங்க காங்கிரஸ் இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## காலபோக பயிர்ச்செய்கைத் திட்டமிடல் (92-93)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களை அடக்கிய வடதமிழீழத்தை உள்ளடக்கியதான 92/93 காலபோக பயிர்ச்செய்கைத் திட்டமிடல் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகத்தின் விவசாயப் பகுதியினர் தயாரித்து வருகின்றனர். இது தொடர்பான கலந்துரையாடல் விவசாயத் துறை சார்ந்த அறிஞர்கள், நிர்வாகிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோரை இணைந்து 27-09-92 ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடாத்தப்பட உள்ளது.


## அறிவித்தல்

**வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் தென்மராட்சிக் கிளை (6)**

மேற்படி சங்கத்தில் உள்ள உறுப்பினர் அனைவரும் எதிர்வரும் 26-09-92 சனிக்கிழமை அன்று நுணாவில் 190ஆம் கட்டையில் இருக்கும் மணம்கோணா பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும் தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு கூரும் முகமாக நடக்கும் உண்ணா விரதத்தில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்;- சங்க நிர்வாகிகள்

வ. பி. சி அ. சங்கம்
தென்மராட்சி கிளை 6,
தாமோதரம்பிள்ளை வீதி, (சி/5100)


## இதய அஞ்சலி



**வரிப்புலிச் சேனையின் வீரப் புலிகள் இவர்கள் நாமம் என்றும் எம் இதயத்தில்**




## கேள்வி அறிவித்தல்

**பிரதேச கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம**

**பாடசாலைகளில் திருத்த வேலைகள்**

18-09-1992ஆம் திகதிய ஈழநாதம் பத்திரிகையில் வெளியான மேற்படி விளம்பரம் தொடர்பாக, கீழ் வரும் வேலைக்கும் கேள்விகள் கோரப்படுகின்றன.

| பாடசாலையின் பெயர் | வேலை விவரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| ... ... ... ... | ... ... ... | ... ...... |
| யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித். | பெருந் திருத்த வேலைகள் | 325,000/- |

கேள்விப் படிவங்கள் 02-10- 1992ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப 2 00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விகள் 07. 10. 1992ஆம் திகதி புதன் கிழமை மு. ப 10 00 மணிவரை ஏற்கப்பட்டு மு ப 10. 00 மணிக்குத் திறக்கப்படும். ஏனைய நிபந்தனைகளும், விபரங்களும் 18. 09. 1992 ஆம் திகதிய விளம்பரத்தில் உள்ளவாறு கொள்ளப்பட வேண்டும்.

(இ. சுந்தரலிங்கம்)
பிரதேச கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

பிரதேச கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 1992. 09. 22
சி/5097

சேனையின்
வீரப் புலிகள்
இவர்கள் நாமம்
என்றும் எம்
இதயத்தில்



லெப். கேனல் ராஜன்
மாதகல், யாழ்ப்பாணம்.



மேஜர் ஜெயகரன் (சாள்ஸ்)
புளியம்பொக்கணை, கிளிநொச்சி.

## விடுதலைப்புலிகள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகள் வீரர்கள் இவர்கள்



மேஜர் கின்னி
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

தளபதிகளுடன்
இணைந்து பல
களங்கள் கண்டு
தீரத்துடன்
போராடி
வீரச்சாவை
அணைத்துக்
கொண்ட
மாவீரர்களுக்கு
சமர்ப்பணம்.



கப்டன் சுபாஸ்கர்
செம்மலை, மணலாறு

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு.

(3265)

- வன்னி, மணலாறு மக்கள்

---

வருடாந்த மேற்படி விளம்பரம் தொடர்பாக, கீழ் வரும் வேலைக்கும் கேள்விகள் கோரப்படுகின்றன.

| பாடசாலையின் பெயர் | வேலை விவரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| ... ... ... ... | ... ... ... | ... ...... |
| யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித். | பெருந் திருத்த வேலைகள் | 325,000/- |

கேள்விப் படிவங்கள் 02-10-1992ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி ப 2 00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விகள் 07. 10. 1992ஆம் திகதி புதன் கிழமை மு. ப 10 00 மணிவரை ஏற்கப்பட்டு மு ப 10. 00 மணிக்குத் திறக்கப்படும். ஏனைய நிபந்தனைகளும், விபரங்களும் 18. 09. 1992 ஆம் திகதிய விளம்பரத்தில் உள்ளவாறு கொள்ளப்பட வேண்டும்.

பிரதேச கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 1992. 09. 22
சி/5097

(இ. சுந்தரலிங்கம்)
பிரதேச கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

---

# நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 24

1990 ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**நேசன்** (நாராயணபிள்ளை தவநேசன் - கந்தளாய், திருக்கோணமலை)

யாழ். முத்திரைச்சந்தை, நல்லூர், உடுப்பிட்டி மற்றும் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களின்போது கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் வரதப்பா** (தங்கவேலாயுதம் விஜயராஜ் - தாளையடி வீதி, மயிலிட்டி, யாழ்)

**யசீர்** (சியாமளாதேவி ஆனந்தன் - அரசடி, தொண்டைமானாறு, யாழ்.)

**2-ம் லெப். மகிழன் / டான்சன்** (இராமலிங்கம் பொன்குமார் - 433, பிரதான வீதி, கொழும்புத்துறை, யாழ்)

**2-ம் லெப். குமரன்** (தில்லைனார் உதயகுமாரன்- 132, செல்வபுரம், வவுனிக்குளம், மாங்குளம், முல்லைத்தீவு)

**2-ம் லெப். திலீபன்** (ஜெகநாதன் கௌதமன் - பெரிய கல்லாறு - 01, கல்லாறு, மட்டக்களப்பு)

**விக்னம்** (இளங்கோ பரணிதரன் - வதிரி, கரவெட்டி, யாழ்.)

**2-ம் லெப். ரஞ்சன்** (சுந்தரம் சண்முகநாதன் - மாங்கேணி, வாழைச்சேனை. மட்டக்களப்பு)

**தமிழ்வாணன்** (இராசதுரை குலம் - முகத்துவாரம், மட்டக்களப்பு)

**அற்புதன்** (கணபதிப்பிள்ளை மகேந்திரன் - நடுப்பிரப்பந்திடல், தம்பலகமம், திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5098)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

அநீதி, பொய்ச் சான்று, துரோகம் ஆகிய வற்றின் அடிப்படையில் ஒரு நிலையான ஆட்சி ஆதிக்கத்தை எழுப்ப முடியாது

— டொமாஸ் தெனிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## இவர்கள் பொதுமக்களா?

ஏரிக்கரை பத்திரிகையின் ஆங்கில ஏடான யான 'டெய்லி நியூஸ்' கடந்த ஏழாம் திகதி முன் பக்கத்தில் இரு படங்களைப் பிரசுரித்திருந்தது. இதில் ஒன்றில் 303 ரக துப்பாக்கி ஏந்திய சிங்களப் பெண் காணப்பட்டார், இரண்டாவது ரி - 81 ரகத் துப்பாக்கியைத் தோளில் போட்டவாறு கையிலும், தோளிலும் தண்ணீர்ப் பாத்திரங்களைக்காவிச் செல்லும் இளைஞன் காணப்பட்டான். அவன் ஓர் இராணுவச் சிப்பாய். இப்படங்களின் கீழ் வெலிஓயாவில் - மணலாறு- பாதுகாப்பிற்காக ஆயுதம் தாங்கிச் செல்லும் யுவதியையும், இளைஞரையும் காணலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே போன்று கடந்த வருட ஆரம்பத்திலும் இதே ஏரிக்கரை பத்திரிகை முன்பக்கத்தில் துப்பாக்கி ஒன்றுடன் - சொட்கன்- சுமார் 65 மதிக்கத்தக்க ஒரு வயோதிபர் வெலிஓயாவில் - மணலாற்றில் - காவற் கடமையில் ஈடுபட்டிருப்பதாகப் படம் ஒன்றினைப் பிரசுரித்திருந்தது.

மேலும், தற்போது வவுனியாவின் எல்லைக் கிராமங்களில் ஆயுதம் தாங்கிய கிராமவாசிகளை நிறுத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கென இளைஞர்கள், யுவதிகளுக்குப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது சிங்களக் குடியேற்ற வாசிகளை ஆயுதபாணிகளாக்குவதும், அதன் மூலம் ஆக்கிரமித்த தமிழர் தாயகத்தை காப்பாற்ற முற்படுவதும், புதிய நிலங்களை ஆக்கிரமிக்க முற்படுவதும், சிறிலங்காவின் அணுகுமுறையாகும். இதற்கெனப் பெரும் தொகைப் பணத்தையும் சிறிலங்கா செலவு செய்யவும் தயாராகவுள்ளது.

சிறிலங்காவின் இந்நடவடிக்கையானது உலக வரலாற்றில் இருந்து படித்துக் கொண்டதுபோல் தெரிகின்றது. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவின் கிழக்குக் கரை ஓரங்களில் குடியேறிய ஐரோப்பியர் குறிப்பாக ஆங்கிலேயரும் இதையே செய்தார்கள். கிழக்குக் கரையில் இருந்து மேற்குக் கரை வரை செல்ல முற்பட்ட ஆங்கிலேயர் அங்கு காணப்பட்ட பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களை மிருகத்தனமாக வேட்டையாடி...

### சிறுபான்மையோர் மீது கொடுமை

# ஈராக் ஒத்த நிலைமையே இலங்கையிலும் நிலவுகிறது

**– சர்வதேச மன்னிப்புச் சபைத் தலைவர்**

(நியூயோர்க்)

ஈராக்கில் சிறுபான்மையினர் கொடுமைப்படுத்தப்படுவது போலவே சிறிலங்காவிலும் நடத்தப்படுகின்றார்கள் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவரான ஜவான் மார்ட்டின் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; எனினும் ஈராக் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை காட்டும் அக்கறையின் அளவுக்கு கூட சிறிலங்காவின் நிலைமை பற்றிக் கவலைப்படுவதாக இல்லை என்றும் தெரிவித்துள்ளார்

மேலும், ஐக்கிய நாடுகள் சபையானது மனித உரிமைகள் பேணுவது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் திருப்தி தருவதாக இல்லை என்றும், மனித உரிமைகளில் மீறல்கள் ஏற்படும் போது ஐ.நா. பொதுச்சபையின் முடிவுக்கு காத்திருக்காமல் உடனடியாக செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்மேலும்சிறிலங்காவிலும், ஈராக்கிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவது அப்பட்டமாகத் தெரிய வருவதாகவும் இது விடயத்தில் ஐ. நா உடன் செயற்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மன்னிப்பு சபையின் அறிக்கை அப்பட்டமான தலையீடு

## சிங்களப் பத்திரிகையாளர் கண்டனம்

(கொழும்பு)

ஈராக்கைப் போலவே இலங்கையிலும் சிறுபான்மையினரின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்பு சபையின் தலைவர் தெரிவித்த கருத்திற்கு சண்டே ஒப்சேபரின் பத்தி எழுத்தாளர் அனுருத்த திலகசிறி கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் எழுதிய கட்டுரையொன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,மன்னிப்பு சபை தலைவரின் இவ் அறிக்கை மூன்றாம் உலக நாடுகளின் உள்விவகாரங்களில் அப்பட்டமான தலையீடு என்றும் அதிகாரத் தன்மை உடையதும் ஜனநாயக விரோதமானது என்றும் தெரிவித்தார்.

ஐ. நா. சபையின் தற்போதைய வலுச் சமநிலையை கருத்திற் கொண்டு பார்த்தால் மன்னிப்பு சபைத் தலைவரின் கூற்று மேற்கு நாடுகள் மனித உரிமை விவகாரத்தை ஒரு கருவியாகப் பாவித்து மூன்றாம் உலக நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட விரும்புவதைக் காட்டுகின்றது என்றும், இம் மூன்றாம் உலக நாடுகள் ஒருமித்த ரீதியில் இணைந்து நவ காலனித்துவத்தின் இத்தகைய போக்குகளை தோற்கடிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சிறிலங்காவின் இனப்பிரச்சினையைக் காட்டி ஐக்கிய நாடுகள் சபை சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதை நியாயப்படுத்த சில சக்திகள் முயற்சிக்கின்றன. இனப்பிரச்சினைக்கு ஓர் சமரசத் தீர்வை தாம் எட்டத் தவறினால் மற்றொரு அந்நிய சக்தி (ஐ நா.) சிறிலங்காவில் தலையிட வேண்டும் என்ற போக்குடையவர்களின் கை ஓங்கும்.

எமது இனச் சண்டையைப் பயன்படுத்தி இந்தியா சிறிலங்காவில் காலடி எடுத்துவைத்து எமது உள்நாட்டு விவகாரங்களில் தலைப்போட்டதை நாம் மறக்கக்கூடாது என்று எழுதும் திலகசிறி, முடிவாக இந்தியா 70,000 படைகளையும் சிறிலங்காவுக்கு அனுப்பியதையும் அந்நிய நாட்டுத் தலையீட்டுக்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

### தாண்டிக்குளத்தினூடாக

# வடபகுதி பிரயாணிகளுக்கு நாள் முழுவதும் அனுமதி?

(வவுனியா)

தாண்டிக்குளம் ஊடாக வவுனியா நகரப்பகுதிக்கும் வடபகுதிக்குமான பயணிகள் போக்குவரத்து அனுமதியில் சிறிலங்கா இராணுவம் புதிய முறையைக் கையாள்கிறது.

1991 ஜனவரி மாதம் தொடக்கம் வடபகுதியிலிருந்து இப்பாதை ஊடாகக் காலையில் வவுனியா நகரை நோக்கிச் செல்லவும் மாலையில் வடபகுதி நோக்கி பயணிகள் செல்லவுமே இராணுவம் தினங்களாகக் கொழும்பிலிருந்து வரும் பயணிகளும் வவுனியா நகரப் பகுதிக்குச் செல்லும் பயணிகளும் காலையிலிருந்தே பிரயாணத்தைத் தொடர இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

இராணுவத்தின் புதிய திட்டத்தினால் தென்பகுதியிலிருந்து வரும் பயணிகளைக் காலை வேளையிலேயே வவுனியாவிற்கு வடக்கே வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

### கல்வி டிப்புளோமா பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்புளோமா பகுதிநேர, முழுநேர (1991) பரீட்சைகள் நவம்பர் நான்காம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் அனுப்பிவைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் நவம்பர் நான்காம் திகதிக்குமுன் பெறுமாறு பரீட்சைக்கிளைஅறிவித்...

## படையணி நகர்வை பார்த்திட வா பார்த்திபனே

எழுந்து வா
திலீபா,
உன்
எண்ணத்தில்
விரிந்த கனவுக்கு
உயிர் கொடுத்து,
உருவம்
கொடுத்துக் கொண்டிருக்
கிறோம்.
ஒரு தடவை
எழுந்து
இம் மண்ணுக்கு வா.
'ஆணாதிக்கப்பிடிக்குள்
அகப்பட்டு,
அணுவாய்த்துடித்து,
அழிந்து போவதற்கு
பெண்ணினம்
இனியும்
பேதமையுடையது அல்ல.
உயிர்ப்புடன்
எழுவர்.
உரிமைகள்
மீட்க
உறுதியாய் உழைப்பர்'
என்ற
எங்கள்
தேசத்தலைவனின்
அசைக்க முடியாத
நம்பிக்கைக் கோட்டைக்கு
அரணாய்
நின்றவன் நீ.
அதனால் தான்
'சுதந்திரப் பறவைகளாய்',
மலர்ந்தது
விடுதலைப்புலிகள்
மகளிர் அமைப்பு.
'அடக்குமுறை அரசுக்கு
பாடம் புகட்டுவோம்'
என்று
துடித்தெழுந்த
எங்களுக்கு
ஒடுக்குமுறை வடிவங்கள்
எவை எவையென்று
உணர்த்தி'
எம்மை
உறுதியாக்கியவன் நீ.
சமூக அவமதிப்புக்களுக்கு
ஈடுகொடுக்க முடியாமல்
தவித்து நாம்
தளர்ந்த போது,
'விழுந்து விடாதீர்.
துணிந்து
கால் பதிப்பீர்'
என்று
தட்டிக்கொடுத்து,
எம்மை
நிமிர்ந்து
நடக்க வைத்தவன் நீ.
'பெண்ணினத்தின்
விடிவுக்கு
பெருவிளக்காய்
நாம் இருக்க வேண்டும்'
என்ற
எங்கள் தலைவனின்
எண்ணக்கருவூலத்தின்
திறவு கோலாய்
இருந்தவன் நீ.
தேசியத்தலைவரின்
நேரிய பாதையில்

எம்மை நோக்குகின்றாய்.
காந்தீய வழிவந்த பாரதம்
நீதியாய் நடக்குமா?
உள்ளத்தில்
கேள்வி நிழலாடியது.
ஆனால்
உருவம் கொடுக்க
விரும்பாமல்
உன்னைப் பார்க்கின்றோம்.
திலீபன்!
உனக்குத் தெரியும்
எது நடக்குமென்று.
எமக்கும்
கொஞ்சம்
தெரிந்துதான்
இருந்தது.
ஆனால்
ஒன்றை மட்டும்
உறுதியாய்ச் சொன்னாய்.
'என் மரணத்தின் முடிவில்
மக்கள் புரட்சி
வெடிக்கும்'
உன் மனதில்
ஆழப்பதிந்து விட்ட
நம்பிக்கை
எமக்குள்ளும்
தன்
வேர்களைப் பரப்ப,
'வெற்றியுடன்
வருவது நிச்சயம்'
என்ற உறுதியுடன்
உன்னை
யாகசாலைக்கு
அனுப்பி வைக்கின்றோம்.
ஆனால்
இதயம் பிளந்து
உதிரம் சிந்த,
இமைகள் வெடித்து
கண்ணீர்
வெள்ளம் பாய,
கதறித்துடித்த
காந்தீயத்தை
கட்டிப் போட்டு
விட்டல்லவா
காந்தி தேசத்தவர்கள்
உன்
உயிர்ப்பறவைக்கு
எரியூட்டினார்கள்.
ஆனால்
'எரிந்தது நீயல்ல.
எங்கள் இதயங்கள்'
என்ற
உண்மையை
அவர்கள்
உணர்ந்து கொள்ளத்
தவறிவிட்டார்கள்.
எரிந்த இதயங்கள்
கருகிவிடவில்லை.
எரிமலையாக
எழுந்து கொண்டன.
உண்மை தெரிந்து
ஓடிய பாரதம்,
மீண்டும்
இம் மண்ணில்
பாதம் பதிக்கும்
கனவினைக் கூட
காண அஞ்சிடும்
சிங்களப் படைக்கும்
இந்நிலை தான்

முடிவு செய்துள்ளது. இதற்கென இளைஞர்கள், யுவதிகளுக்குப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது சிங்களக் குடியேற்ற வாசிகளை ஆயுதபாணிகளாக்குவதும், அதன் மூலம் ஆக்கிரமித்த தமிழர் தாயகத்தை காப்பாற்ற முற்படுவதும், புதிய நிலங்களை ஆக்கிரமிக்க முற்படுவதும் சிறிலங்காவின் அணுகுமுறையாகும். இதற்கெனப் பெரும் தொகைப் பணத்தையும் சிறிலங்கா செலவு செய்யவும் தயாராகவுள்ளது.

சிறிலங்காவின் இந்நடவடிக்கையானது உலக வரலாற்றில் இருந்து படித்துக் கொண்டதுபோல் தெரிகின்றது. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவின் கிழக்குக் கரை ஓரங்களில் குடியேறிய ஐரோப்பியர் குறிப்பாக ஆங்கிலேயரும் இதையே செய்தார்கள். கிழக்குக் கரையில் இருந்து மேற்குக் கரை வரை செல்ல முற்பட்ட ஆங்கிலேயர் அங்கு காணப்பட்ட பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களை மிருகத்தனமாக வேட்டையாடினர். அதை மனித வேட்டை எனச் சொல்வதை விட வேறு வார்த்தைகளினால் சொல்ல முடியாது.

இதேபோன்றே அவுஸ்திரேலியாவில் 1770 ஆம் ஆண்டின் பின்னர் குடியேறிய ஆங்கிலக் ‘கிரிமினல்கள்’ உலகில் உள்ள தொல் குடிகளான அவுஸ்திரேலிய பூர்வீக குடிகளை ஓட ஓட விரட்டினர். 1770 இல் ஜேம்ஸ்குக் அவுஸ்திரேலியாவைக் கண்டுபிடித்தபோது அங்கு 100 வீதமாக இருந்த தொல்குடியினர் இன்று 1.1 ஒருவீதமாக மட்டுமே உள்ளனர். அத்தோடு இன்றுவரை அவர்கள் மீதான ஒடுக்குமுறை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

தென்னாபிரிக்காவில் இன்று வரையும் இதே நிலை தொடர்கின்றது. அப்பிரதேசத்தின் பூர்வீக குடிகளை வளமற்ற நிலப்பகுதிக்குள் ஒதுக்கிவிட்டு செல்வம் கொழிக்கும் பகுதிகளை குடியேற்றவாசிகள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். சுமார் 250 லட்சத்திற்கு மேற்பட்ட கறுப்பர்கள் 50 லட்சத்திற்கும் குறைவான வெள்ளையர்களால் ஆளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு அவர்கள் கைகளில் துப்பாக்கியும் அதிகாரங்களும் இருப்பதே காரணமாகும்.

அதாவது அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் எது செய்து முடிக்கப்பட்டதோ தென் ஆபிரிக்காவில் இதுவரை எது நடைபெற்று வந்ததோ அதையே சிறிலங்கா இன்று செய்ய முற்படுகின்றது. அங்கும் வெள்ளையர்கள் துப்பாக்கியையும், அதிகாரத்தையும் பயன்படுத்தியே அவற்றைச் செய்து முடித்தனர் செய்து முடிக்க முற்படுகின்றனர். இங்கும் சிங்களவரும் அதையே செய்து முடிக்கப்பார்க்கின்றனர்.

இந்நிலையில் அன்று அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் பூர்வீக குடிகளை அதிகாரத்தைப் பாவித்து ஆயுதம் கொண்டு வேட்டையாடி, அவர்களின் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டவர்களை எல்லாம் அப்பாவிப் பொதுமக்கள், என்று கூறிவிடமுடியுமா? அவர்கள் ஆடிய மனித வேட்டை பொது மக்களுக்குரிய பண்பா? இதே போன்று இன்று தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துள்ள ஆயுதம் தாங்கிய சிங்களக் காடையர் கூட்டம் இராணுவச்சீருடை அணியாததினால் மட்டும் அப்பாவிப்பொதுமக்கள் என்று வரையறுத்து விடமுடியுமா?

---

தெரிவித்தார்.

ஐ. நா. சபையின் தற்போ ... உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதை நியாயப்படு ... தலையிட்டுவதை உதாரணமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

---

தாண்டிக்குளத்தினூடாக

## வடபகுதி பிரயாணிகளுக்கு நாள் முழுவதும் அனுமதி?

(வவுனியா)

தாண்டிக்குளம் ஊடாக வவுனியா நகரப்பகுதிக்கும் வடபகுதிக்குமான பயணிகள் போக்குவரத்து அனுமதியில் சிறிலங்கா இராணுவம் புதிய முறையைக் கையாள்கிறது.

1991 ஜனவரி மாதம் தொடக்கம் வடபகுதியிலிருந்து இப்பாதை ஊடாகக் காலையில் வவுனியா நகரை நோக்கிச் செல்லவும் மாலையில் வடபகுதி நோக்கி பயணிகள் செல்லவுமே இராணுவம் அனுமதித்து வந்தது. சில தினங்களாகக் கொழும்பிலிருந்து வரும் பயணிகளும் வவுனியா நகரப் பகுதிக்குச் செல்லும் பயணிகளும் காலையிலிருந்தே பிரயாணத்தைத் தொடர இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

இராணுவத்தின் புதிய திட்டத்தினால் தென்பகுதியிலிருந்து வரும் பயணிகளைக் காலை வேளையிலேயே வவுனியாவிற்கு வடக்கே வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. (தி)

---

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே

## கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே கோட்ட மட்டத்தில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு:

மருதனார்மடம் கோட்டத்தில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் மாலை 4.10 மணிக்கு 19 வயதுப் பிரிவில் ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு 17 வயதுப் பிரிவில் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி, 4-10 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

யாழ் கல்விக் கோட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 3-15 மணிக்கு 17 வயதுப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி எதிர் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம். மாலை 4-30 மணிக்கு 17 வயதுப் பிரிவில் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.

## தப்பி ஓடிய சிப்பாய் வீதியில் சுட்டுக் கொலை

ஹறமஸ்ஹந்திய இராணுவ முகாமில் கடமையாற்றி பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்ற லியன சுதத் மென்டிஸ் (வயது 23) என்பவர் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் காலியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் விவாகமான இராணுவ சிப்பாய் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

---

வீணான யுத்தத்தினால்

## அகதிகள் பராமரிப்பு செலவு அதிகரிக்கிறதாம்

(அக்கரைப்பற்று)

''இன்று நடைபெற்றுக் கொண்டு வரும் வீணான யுத்தத்தின் காரணமாகத் தினசரி ஆறு லட்சம் அகதிகளைப் பராமரிப்பதற்குப் பெருந்தொகையான நிதி தேவையாக இருக்கிறது. இதே நேரத்தில் யுத்த நடவடிக்கைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் என செலவுகள் அதிகரித்துக்கொண்டே போகிறது''

இவ்வாறு சிறீலங்கா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் தம்பிலுவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றியபோது தெரிவித்தார்

இவ்வாறாகச் செலவுகள் அதிகரித்துக் கொண்டு போவதால், அபிவிருத்தி வேலைகளைக் கவனிக்க முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

---

## கல்விடிப்புளோமா பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்புளோமா பகுதிநேர, முழுநேர (1991) பரீட்சைகள் நவம்பர் நான்காம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் நவம்பர் நான்காம் திகதிக்குமுன் பெறுமாறு பரீட்சைக்கிளை அறிவித்துள்ளது. (05)

## பௌதிகவியல் II மீள் பரீட்சை

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சை பௌதிகவியல் II இற்கான மீள்பரீட்சை ஒக்டோபர் 26ஆம் திகதி காலை 9-00 மணிக்கு நடைபெறும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

## கண்டெடுக்கப் பட்டுள்ளது

யாழ்- மருத்துவமனை வீதியில் கீழ்க்காணும் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு நோயாளர் நலன்புரிச்சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இம்மானுவல் பூபாலசிங்கம் தெல்லிப்பளை என்பவருடைய அடையாள அட்டை உட்பட சில ஆவணங்கள்.

மேற்படி பொருள்களை உரிய அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வங்கியாளர் பரீட்சை

மூன்று ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் இலங்கை வங்கியாளர் பரீட்சை மீண்டும் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம்திகதி நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டுமென்று இலங்கை வங்கியாளர் நிலையம் அறிவித்துள்ளது. (42)

## இடமாற்றம்

அளவெட்டி கிழக்கு ஜே/217 கிராமசேவை அலுவலராக கடமை புரிந்த திரு ஆ. வ. சுந்தரலிங்கம் கடந்த மாதம் (28- 8- 92) தொடக்கம் கொக்குவில் தென்கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவின் ஜே/123 கிராம உத்தியோகஸ்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

ஈடுகொடுக்க முடியாமல்
தவித்து நாம்
தளர்ந்த போது,
‘விழுந்து விடாதீர்.
துணிந்து
கால் பதிப்பீர்’
என்று
தட்டிக்கொடுத்து,
எம்மை
நிமிர்ந்து
நடக்க வைத்தவன் நீ.
‘பெண்ணினத்தின்
விடிவுக்கு
பெருவிளக்காய்
நாம் இருக்க வேண்டும்’
என்ற
எங்கள் தலைவனின்
எண்ணக்கருவூலத்தின்
திறவு கோலாய்
இருந்தவன் நீ.
தேசியத்தலைவரின்
நேரிய பாதையில்
பார்த்திபன் உந்தன்
சீரிய வழிகாட்டலில்
உறுதியாய் எங்கள்
பயணம்
தொடர்ந்த வேளையிலே,
எண்பத்தியேழு
செப்ரெம்பர்
வந்தது
இதயத்தை
அதிர்வித்த
பதினைந்தாம்
தேதியும்
வந்தது.
பார்த்திபா,
நல்லை வீதியில்
நீ
யாகம் தொடங்கப்
போகின்றாய்
என்ற
சேதி சொல்லிவிட்டு,
வழமையான
அதே உன் புன்னகையுடன்
எரியூட்டினார்கள்.
ஆனால்
‘எரிந்தது நீயல்ல.
எங்கள் இதயங்கள்’
என்ற
உண்மையை
அவர்கள்
உணர்ந்து கொள்ளத்
தவறிவிட்டார்கள்.
எரிந்த இதயங்கள்
கருகிவிடவில்லை.
எரிமலையாக
எழுந்து கொண்டன.
உண்மை தெரிந்து
ஓடிய பாரதம்,
மீண்டும்
இம் மண்ணில்
பாதம் பதிக்கும்
கனவினைக் கூட
காண அஞ்சிடும்
சிங்களப் படைக்கும்
இந்நிலை தான்
என்பதை
களம் சென்று
பகை வென்று
தெளிவாக்கி வருகின்றோம்,
உறுதியாய் நின்று
உரமாய் ஆகும்
எங்களைப் பார்க்க
எழுந்து வாதிலீபா
ஒரு தடவையேனும்
இம் மண்ணுக்குவா.
மாவீரனே,
உன் சின்னப்புன்னகையுடன்
சீக்கிரம் வா திலீபனே.
விழுதுகள் பரப்பி,
உலகம் வியந்திட
சாதனை படைக்கும்
எங்கள்
படையணி நகர்வை
பார்த்திடவா
பார்த்திபனே.

- சக்தி -

---

## திலீபன்

## பத்தாம் நாள்: (24-9-92)

கூட்டை விட்டுப் பிரிய குற்றுயிர் துடிக்கிறதோ? - தமிழ்
நாட்டை விட்டுப் பிரிய நம்முயிர் நினைக்கிறதோ?
வீட்டை விட்டுப் பிரிந்து வந்த விளக்கு அணைகிறதோ?
— அடிமைப்
பூட்டை உடைத்த கரம் பூமியில் சாய்கிறதோ?

பாசத் தமிழ் பெற்றெடுத்த கனியே — நீ
பறந்து போக நினைக்கின் றாயோ?
நாசப் படையுந்தன் கோரிக்கை தனையேற்று
நிறைவேற்றா தென்பதால் நீபோக நினைத்தாயோ?

சொல்லடா என்மகனே! உன் சுந்தர வடிவம் எங்கே?
சொல்லடா என்மகனே! உன்... சுடரொளி விழிகள்எங்கே?
சொல்லடா என்மகனே! உன் சோதியாம் சிரிப்பு எங்கே?
சொல்லடா என்மகனே! உன்... நிமிர்ந்த்நடைதான் எங்கே?

சொல்லடா என்மகனே! உன்... செங்கரச் சிறப்பு எங்கே?
சொல்லடா என்மகனே! உன் ... கருணையாம் முகமும்எங்கே?
சொல்லடா என்மகனே! உன்.. வீணையாம் மார்பு எங்கே?
சொல்லடா என்மகனே! உன் .. கோமள உடல்தான் எங்கே?
எங்கே?... எங்கே?... எங்கே?...

- கவிஞர்: மு.வே.யோ.வாஞ்சிநாதன்.

ஈழநாதம்

# அ. தி. மு. க - காங்கிரஸ் சட்டசபையில் வாக்குவாதம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் நேற்று அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களுக்கும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களின் ஒரு பகுதியினருக்கும் இடையே சூடான வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

முதல் முறையாக பகிரங்கமாக நடைபெற்ற மோதல் தொடர்பாக காங்கிரஸ் உறுப்பினர்கள், பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்னால் அமர்ந்து கூச்சலிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சி மீது சுயேச்சை உறுப்பினரான தாமரைக்கனி கூறிய அவமரியாதை வார்த்தையை ஆட்சேபித்தும், பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணப்பன், எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தை மிரட்டுவது போல் சைகை செய்தார் என்றும் அவர்கள் குறிப்பிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பின்னர் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சேடப்பட்டி முத்தையாவிற்கு விடுத்த உத்தரவின்படி அவர் தாமரைக்கனியை நேற்றைய சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கினார்.

## கோஷ்டிசண்டையை நிறுத்த காங். மேலிடம் முயற்சி

(சென்னை)

கோஷ்டிச் சண்டையால் தமிழக காங்கிரஸ் பிளவுபடாமல் தடுக்கும் முயற்சியில் காங்கிரஸ் மேலிடம் இறங்கியுள்ளதாக சென்னையில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பகிரங்கமாக கோஷ்டி சண்டையில் ஈடுபடுபவர்களை இடை நிறுத்தம் செய்வது, எச்சரிக்கையை மீறுவோரை நீக்குவது போன்ற கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழக காங்கிரஸில் கட்டுப்பாட்டை நிலை நிறுத்துமாறு மேலிட நிர்வாகத்தை காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவ் பணித்துள்ளார்.

பிரதமர் உத்தரவுப்படி அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜனார்த்தன் பூஜாரி கடந்த வாரம் தமிழக காங்கிரசுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

கருத்து வேறுபாடுகள் எதுவாக இருந்தாலும் முறைப்படி அவற்றை கட்சிக்குள் மட்டுமே கிளப்பலாம்; விவாதிக்கலாம்; முறையிடலாம்; அதை விடுத்து ஒருவரை ஒருவர் பகிரங்கமாக குற்றஞ்சாட்டி மேடைகளில் பேசுவதோ அறிக்கைகள் பேட்டிகள் அளிப்பதோ தவறு. தொடர்ந்து இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பூஜாரி அதில் எச்சரித்துள்ளார்.

## அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் எனக்கில்லை

- மூப்பனார்

(ஹைதராபாத்)

தமிழகத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன், தான் தேசியப் பேரவையை அமைத்ததாகக் கூறப்படுவதை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொதுச்செயலர் கறுப்பையா மூப்பனார் மறுத்திருக்கிறார்.

தமிழ் நாட்டில் 1967 ஆம் ஆண்டிலிருந்து எதிர்க்கட்சியாக இருக்கிற இந்திரா காங்கிரசைப் பலப்படுத்துவதற்காகத்தான் தேசியப் பேரவை அமைக்கப்பட்டதாகக் கூறி

ஹைதராபாத்தில் நேற்றுச் செய்தியாளருக்குப் பதிலளித்த மூப்பனார், இந்தப் பேரவையை அமைப்பது பற்றிக் கட்சித்தலைவரான பி. வி. நரசிம்மராவுடன் பேசவில்லை என்றார். இந்திரா காங்கிரஸ் தலைமை விரும்பினால், தான் தேசியப் பேரவையைக் கலைக்கப் போவதாகவும் மூப்பனார் தெரிவித்தார்.

## ஹர்சத் மேத்தா பிணையில் விடுதலை

## திலீபன் நினைவு நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் விடுதலை வேள்வியில் ஆகுதியாகி உலக வரலாற்றில் எமது நிலையை உணரவைத்த தியாகி திலீபன் நினைவாக எதிர்வரும் 26-ம் திகதி நடைபெறும் இறுதிநாள் நோன்பில் இணைந்து நோன்பிருக்குமாறு வட மாகாணத் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தமது ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து ஒரு துண்டுப்பிரசுரத்தையும் அதுவெளியிட்டுள்ளது

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் அவையினர் தியாகதீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி ஒன்றை நாளை வெள்ளிக்கிழமை காலை எட்டு முப்பது மணியளவில் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

★ ★ ★

(குருநகர்)

தியாகி லெப் கேணல் திலீபனின் ஐந்தாவதாண்டு ஒன்பதாம் நாளான நேற்று (23-9-92) குருநகர் சனசமூக

## மகோற்சவம்

(குருநகர்)

யாழ்—வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் 27ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை 9-15 மணிக்கு சித்திரத் தேரோட்டமும், 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் என தேவஸ்தான ஆதீனகர்த்தாசபை அறிவித்துள்ளது. (21)

சேர்பியா - மொன்றிநிக்ரோ

## உள்ளடக்கிய யூக்கோ அரசு ஐ. நா. வில் இருந்து நீக்கம்

(நியூயோர்க்)

சேர்பியா, மொன்றிநிக்ரோ ஆகியவற்றை மாத்திரமே கொண்ட யூகோஸ்லாவிய அரசை ஐ. நா. பொதுச்சபை நீக்கி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. சபையில் மீண்டும் அங்கத்துவம் கோருவதற்காக யூகோஸ்லாவிய அரசு புதிய விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும் என்றும் ஐ.நா. பொதுச்சபை கூறியுள்ளது.

யூகோஸ்லாவியா ஐ. நா. பொதுச்சபையில் இருந்து வெளியேற்றுவதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்த போது:

127 நாடுகள் ஆதரவாகவும், ஆறு நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 26 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

கென்யா, சுவாஸ்சலண்ட், சாம்பியா, தான்சானியா, யூகோஸ்லாவியா, சிம்பாம்பே ஆகிய ஆறு நாடுகளே எதிராக வாக்களித்திருந்தன.

சீனா, இந்தியா, கியூபா, வியட்னாம் ஆகியன வாக்களிக்காத 26 நாடுகளில் சிலவாகும்.

ஐ நா. ஸ்தாபிக்கப்பட்ட 47 ஆண்டு காலப் பகுதிகளில் அதன் வரலாற்றில் முதல் தடவையாக யூகோஸ்லாவியா மட்டுமே அங்கத்துவத்தை இழந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆந்திர முதலமைச்சர் பதவி விலகுவார்?

(ஹைதராபாத்)

ஆந்திர பிரதேச முதல்வர் ஜனார்த்தன் ரெட்டி தனது பதவியைத் துறக்க இருக்கின்றார்.

ஆந்திர பிரதேச சட்டமன்றம், பண ஒதுக்கல் மசோதாவை நிறைவேற்றிய உடனேயே முதல்வர் ஜனார்த்தன் ரெட்டிக்கு பதிலாக புதிய முதல்வரைத் தேர்ந்தெடுக்கும் என்று ஆந்திரப் பிரதேச விவகாரங்களைக் கவனிக்கும் காங்கிரஸ் பிரமுகர் ஜனார்த்தன் பூஜாரி கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மரபுகளையும், உயர்ந்த ஜனநாயக மரபுகளையும் பேணிக் காப்பதற்காக தாம் பதவியை துறக்க முடிவு செய்திருப்பதாக முதல்வர் ஜனார்த்தன் ரெட்டி கூறினார். மருத்துவ கல்லூரி விவகாரம் பற்றிய நீதிமன்றத் தீர்ப்பு வியாபார நெறிகளைப் பற்றியதேயன்றி தீய நோக்கம் எதையும் கொண்டது அல்ல என்றும் ஜனார்த்தன் ரெட்டி மேலும் கூறினார்.

## திலீபனின் நினைவு

நிகழ்ச்சிகள், கவி அரங்குகள்,

சிரியாவிற்கு இந்தியாவின்

# இரசாயனப்பொருள் விற்பனை; அமெரிக்கா கடும் கண்டனம்

(வாஷிங்டன்)

சிரியாவுக்குச் சிலவகை இரசாயனப் பொருள்களை இந்தியா விற்பனை செய்திருப்பது தொடர்பாக அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த விற்பனை இரசாயன ஆயுதங்கள் பரவுவதைத் தடுக்கும் அமெரிக்காவின் திட்டத்திற்கு ஊறுவிளைவிப்பதாக அமெரிக்கா அதிகாரபூர்வமாக கூறியுள்ளது.

ஜேர்மன் கப்பல் ஒன்றின் மூலமாக இந்தியா ஒருதொகை றைமீதைல் பொஸ்பைற் எனப்படும் இரசாயனத்தைச் சிரியாவுக்கு அனுப்பியிருப்பதை கடந்த ஆகஸ்டில் அமெரிக்கப் புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த இரசாயனப் பொருள் நுண்ணுயிர்க் கொல்லிகள் தயாரிப்பதற்குப் பயன்படுவதாயினும், இதிலிருந்து நச்சு வாயுக்களையும் தயாரிக்க முடியும்.

இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதில் சிரியா ஆர்வம்கொண்டிருப்பது கடந்த யூலையில் தெரிய வந்ததாகவும், இதனால் இரசாயனப் பொருள்களை மீண்டும் இந்தியாவிற்கே திருப்பி அனுப்பும்படி ஜேர்மன் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கப் பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது

## பெல்ஜியம் இரண்டாகலாம்; பிரிவினை கோரிக்கை தீவிரம்

பெல்ஜியம் இரண்டாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அந்நாட்டில் வலுவடைந்து வருவதாகத் தெரிய வருகின்றது

கடந்த 160 ஆண்டுகளாக பிரான்சு மொழி பேசும் மக்களும், டச்சு மொழி பேசும் மக்களும் ஒன்றாக வாழ்ந்துவிட்டபோதிலும், நாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்ததில்லை. எனவே பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று பிளெமிஷ் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் செக், மற்றும் செலாவாக்கிய மக்கள் கருத்தொருமைப்பட்டு சந்தோசமாகப் பிரிந்து கொண்டதைப் போல நாமும் பிரிந்து கொள்ள முயல்கின்றோம் என்று தெரிவித்தார்.

## வாகரைப்பகுதி மக்கள் வைத்தியவசதியின்றி அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகரை, கதிரவெளி, மாங்கேணி, பாற்சேனை ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் கடந்த இரு வருடங்களாக வைத்திய வசதிகள் எதுவும் இன்றிக் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்திய நிலையங்களை உடனடியாகத் திறக்க முடியாவிட்டாலும் நடமாடும் வைத்திய சேவையாவது நடத்தும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி வைத்திய நிலையங்கள் அனைத்தும் 1990 ஜூனில் ஆரம்பமான வன்செயல்களை அடுத்து மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## தனியார் வசம்

(கொழும்பு)

ஏற்கனவே வழங்கியது போக எஞ்சியிருக்கும் 52 தேயிலைத் தோட்டங்களின் நிருவாகமும் இந்த வருட முடிவுக்குள் 22 தனியார் நிறுவனங்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக பெருந்தோட்டத் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

தரமானதேயிலையை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெறுவதற்காகவே இவ்வாறு தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்படுகிறது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## இளவாலை, மாதகலிலிருந்து ஆறு பேர் மீண்டு வந்தனர்

(யாழ்ப்பாணம்)

மாதகல், இளவாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த ஆறுபேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்

இளவாலை, பங்குத்தந்தையான வணக்கத்துக்குரிய றெஜி ராஜேஸ்வரன், வணக்கத்துக்குரிய பீற்றர், மிருசுவிலைச் சேர்ந்த தவப்பிரகாசம், [illegible] மகளிர் கல்லூரி மாணவியும் தவப்பிரகாசத்தின் மகளுமான வதனி (வயது 18), தொழில் நுட்பக்கல்லூரி மாணவனான பேரம்பலம் செந்தில்குமரன் (வயது 21) நாகேந்திரம் ஆகிய அறுவருமே இராணுவ பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் இவர்கள் அங்கிருந்து அழைத்து வரப்பட்டிருக்கின்றனர்.

## நால்வர்

சாமித்தம்பி புலேந்திரன் (25) தப்பாப்பிள்ளை குணம் (26) ஆகிய நான்கு குடும்பத்தலை [illegible]

# அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் எனக்கில்லை

**- மூப்பனார்**

(ஹைதராபாத்)

தமிழகத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன், தான் தேசியப் பேரவையை அமைத்ததாகக் கூறப்படுவதை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொதுச்செயலர் கறுப்பையா மூப்பனார் மறுத்திருக்கிறார்.

தமிழ் நாட்டில் 1967 ஆம் ஆண்டிலிருந்து எதிர்க்கட்சியாக இருக்கிற இந்திரா காங்கிரசைப் பலப்படுத்துவதற்காகத்தான் தேசியப் பேரவை அமைக்கப்பட்டதாகக் கூறினார்.

ஹைதராபாத்தில் நேற்றுச் செய்தியாளருக்குப் பதிலளித்த மூப்பனார், இந்தப் பேரவையை அமைப்பது பற்றிக் கட்சித்தலைவரான பி. வி. நரசிம்மராவுடன் பேசவில்லை என்றார். இந்திரா காங்கிரஸ் தலைமை விரும்பினால், தான் தேசியப் பேரவையைக் கலைக்கப் போவதாகவும் மூப்பனார் தெரிவித்தார்.

---

## 3ஆம் உலகில்

வீழ்ச்சி யடைந்து வருவதாக அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் உலகின் பெரும்பான்மை ஏழை மக்களுக்கு பட்டினியும் போஷாக்கின்மையுமே மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது என உணவு விவசாய ஸ்தாபன அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை வரப்போகும் மாதங்களில் பத்துக் கோடிக்கு மேற்பட்ட மக்கள் வரட்சியினால் உணவுப் பற்றாக் குறையை எதிர்நோக்கியிருப்பதாக அமெரிக்கா தனிப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

1961-63 முதல் உலக மக்கள் தொகை 180 கோடி அதிகரித்திருக்கிறது ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் அகதிகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். சோமாலியாவில் சிவில் யுத்தம், உணவு பற்றாக் குறை என்பன காரணமாக பதினைந்து இலட்சம் மக்கள் உடனடி மரண அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

---

## ஹர்சத் மேத்தா பிணையில் விடுதலை

(டில்லி)

இந்தியாவின் மிகப் பெரும் நிதி ஊழலின் முக்கிய புள்ளியான ஹர்சத் மேத்தா 110 நாட்கள் சிறையில் இருந்த பின்னர் நேற்று முன் தினம் பத்து இலட்சம் ரூபாய் பிணையில் விடப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது

அரசப் பத்திர பேர ஊழலில் முக்கிய குற்றவாளியான இவரை வேறு எந்த வழக்கிலும் கைது செய்யவோ காவலில் வைக்கவோ ஆணைகள் இல்லாததால் விடுவித்ததாக பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி தெரிவித்துள்ளார்.

செல்லுபடியாகக் கூடிய ஆணை எதுவும் இன்றி தம்மை சட்டவிரோதமாக சிறையில் அடைத்திருப்பதாக ஹர்சத் மேத்தா உயர் நீதிமன்றத்தில் முறையிட்டிருந்தார்.

---

## பிரேமதாசா

வும் அவரது பாரியாரும் அழைத்துச் செல்லப்படும் வழியில் இரு மருங்கும் கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. சிறிலங்காவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் உள்ள உறவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் பதாகைகள் காணப்பட்டன.

---


வாகன உரிமையாளர்களுக்கான

## கலந்துரையாடல்

வடபகுதிக்கு வெளியே போக்குவரத்தில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் 27-09-92 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருப்பதால் அன்றையதினம் பிற்பகல் 2 30 மணியளவில் எமது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் ஓமந்தை சோதனை நிலையத்திற்கு சமுகம் தருமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் கேட்கின்றனர்.

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

(3267)


---

வுச் சங்கங்களின் சமாசம் தமது ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து ஒரு துண்டுப்பிரசுரத்தையும் அதுவெளியிட்டுள்ளது

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் அவையினர் தியாகதீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி ஒன்றை நாளை வெள்ளிக்கிழமை காலை எட்டு முப்பது மணியளவில் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

★ ★ ★

(குருநகர்)

தியாகி லெப் கேணல் திலீபனின் ஐந்தாவதாண்டு ஒன்பதாம் நாளான நேற்று (23-9-92) குருநகர் சனசமூக நிலை முன்றலில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

கடற்புலிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி உண்ணாவிரத நிகழ்வில் பெருமளவில் பெண்களும், ஆண்களும், முதியவர், சிறுவர்களும் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் (22-9-92) குருநகர் தொடர்மாடி முன்றலில் ஆரம்பமான எட்டு இளைஞர்களின் 72 மணி நேரத் தொடர் உண்ணாவிரதம் நேற்று (23-9-92) 24 மணிநேரங்களைக் கடந்து தொடர்ந்து நடைபெற்றது (21)

★ ★ ★

(கிளிநொச்சி)

தியாகச்சுடர் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவை முன்னிட்டு கிளிநொச்சி, வவுனியா கோட்டங்களில் கிராம ரீதியாக அஞ்சலிக் கூடாரங்கள் அமைக்கப்பட்டு, வழிபாட்டு வைபவமும் வட்டரீதியாகச் சுழற்சியான உண்ணாவிரதப் போராட்டமும் நடத்தப்பட்டு வருகிறது. திலீபன் அவர்களின் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் கலைப் படைப்புகளும் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வருகின்றன

எங்கெங்கும் அலங்கரிப்புகள், உருவப்படங்கள், பதாகைகள், சுலோகங்கள், காணப்படுவதோடு எழுச்சிப் பாடல்களும் ஒலித்த வண்ணம் உள்ளன.

(வடமராட்சி)

தியாக தீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி இன்று 24ஆம் திகதி பிற்பகல் 3 00 மணிக்கு அல்வாய் தெற்கு சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவின் போது தேசியக் கொடி ஏற்றல், ஈகைச்சுடர் ஏற்றல், நினைவுரைகள், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (8 2)

---

ஜனார்த்தன் ரெட்டி தனது பதவியைத் துறக்க இருக்கின்றார்.

ஆந்திர பிரதேச சட்டமன்றம், பண ஒதுக்கல் மசோதாவை நிறைவேற்றிய உடனேயே முதல்வர் ஜனார்த்தன் ரெட்டிக்கு பதிலாக புதிய முதல்வரைத் தேர்ந்தெடுக்கும் என்று ஆந்திரப் பிரதேச விவகாரங்களைக் கவனிக்கும் காங்கிரஸ் பிரமுகர் ஜனார்த்தன் பூஜாரி கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மரபுகளையும், உயர்ந்த ஜனநாயக மரபுகளையும் பேணிக் காப்பதற்காக தாம் பதவியை துறக்க முடிவு செய்திருப்பதாக முதல்வர் ஜனார்த்தன்

---

## திலீபனின் நினைவு

நிகழ்ச்சிகள், கவி அரங்குகள், நினைவுப் பேச்சுக்கள், படக்காட்சிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவ்வாறான நினைவு நிகழ்வுகள் குடாநாட்டின் அனைத்து வட்டப்பிரிவுகளிலும் நேற்று சிறப்புற நடைபெற்றன. இந்த நிகழ்ச்சிகளில் மக்களின் பங்களிப்பு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. இதனால் திட்டமிடப்பட்ட நிகழ்வுகளைவிட மேலதிகமாகவும் சில இடங்களில் சிரமதான நிகழ்ச்சிகளும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது

அதேவேளை தியாகி திலீபன் தியாக மரணமடைந்த தினமான நாளை மறுதினம் எழுச்சி நாளாக அனுஷ்டிக்கப்பட இருப்பதால் வரலாற்றில் என்றுமில்லாதவாறு தமிழீழத்தின் பல்வேறு பகுதிகள் எழுச்சிக்கோலம் பெற்று வருகின்றது சிறுவர்கள், பெண்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சள் தோரணங்கள், பதாகைகள் போன்றவற்றைக் கட்டுவதை அவதானிக்க முடிந்தது. (க)

---

## திலீபன்

கூட்டங்கள் நடைபெற உள்ளது, இவ் அஞ்சலிக் கூட்டங்களைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற இருக்கிறது.

---

## மாணவர்

இந்த முத்திரைகளை உரிய [illegible] அனுப்புவதற்கு மாணவர்களின் வரவு விபரங்களை அவ்வப்பிரதேச செயலகங்களிலுள்ள பாடசாலை அதிபர்களினால் வழங்கப்படாமையால் கணக்கீடுசெய்து சரியான தொகைக்கானவற்றை அனுப்ப முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [42]

---

நீதிமன்றத் தீர்ப்பு வியாபார நெறிகளைப் பற்றியதேயன்றி தீய நோக்கம் எதையும் கொண்டது அல்ல என்றும் ஜனார்த்தன் ரெட்டி மேலும் கூறினார்.

---

படுகிறது.

இவ்வைத்திய நிலையங்களை உடனடியாகத் திறக்க முடியாவிட்டாலும் நடமாடும் வைத்திய சேவையாவது நடத்தும்படி மக்கள் கோரிக்கை

---

# இளவாலை, மாதகலிலிருந்து ஆறு பேர் மீண்டு வந்தனர்

(யாழ்ப்பாணம்)

மாதகல், இளவாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த ஆறுபேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்

இளவாலை, பங்குத்தந்தையான வணக்கத்துக்குரிய றெஜி ராஜேஸ்வரன், வணக்கத்துக்குரிய பீற்றர், மிருசுவிலைச் சேர்ந்த தவப்பிரகாசம், கண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியும் தவப்பிரகாசத்தின் மகளுமான வதனி (வயது 18), தொழில் நுட்பக்கல்லூரி மாணவனான பேரம்பலம் செந்தில்குமரன் (வயது 21) நாகேந்திரம் ஆகிய அறுவருமே இராணுவ பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் இவர்கள் அங்கிருந்து அழைத்து வரப்பட்டிருக்கின்றனர்.

---

# இடம்பெயர்ந்த ஆசிரியர் சம்பள நிலுவை கிடைக்கும்

(மட்டக்களப்பு)

வடக்குக் கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரால் அண்மையில் வழங்கப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் இடம் பெயர்ந்து வேறு மாவட்டங்களில் இணைந்திருக்கும் சகல ஆசிரியர்களினதும் 1990ஆம் ஆண்டிலிருந்து சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் தற்போது இணைந்திருக்கும் பாடசாலை அதிபர் மூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

---

## எறிகணை தாக்கு

(பொன்னாலை)

மூளாய், பொன்னாலை, சுழிபுரம் ஆகிய பகுதிகளை நோக்கி காரைநகரில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் தினமும் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதனால் மேற்படி பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி இடம் பெயர்ந்து வருகின்றனர். (க)

---

## வாழைச்சேனை

தில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் மற்றுமொருவரும் படுகாயமடைந்துள்ளனர். கடந்த வியாழனன்று நடைபெற்ற இச் சம்பவத்தில் பண்டார, செனவிரட்ண, என்னும் இருவருமே காயமடைந்தனர் எனவும், பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

(கொழும்பு)

ஏற்கனவே வழங்கியது போக எஞ்சியிருக்கும் 52 தேயிலைத் தோட்டங்களின் நிருவாகமும் இந்த வருட முடிவுக்குள் 22 தனியார் நிறுவனங்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக பெருந்தோட்டத் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

தரமானதேயிலையை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெறுவதற்காகவே இவ்வாறு தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்படுகிறது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

---

## நால்வர்

சாமித்தம்பி புலேந்திரன் (25) தப்பாப்பிள்ளை குணம் (26) ஆகிய நான்கு குடும்பத்தலைவர்களுமே கைது செய்யப்பட்டோராவர்

---

## இராணுவ

பொ. ரூபன் (வயது 22) என்ற இளைஞர் பலியாகியுள்ளார். இவரது தந்தையார் மயிரிழையில் உயிர்தப்பினார். (க)(பா)

---


# மரண அறிவித்தல்

## யூட் ஜெயரூபன்

சில்லாலையைச் சேர்ந்த யூட் ஜெயரூபன் அகால மரணமானார். இவர் சவரிமுத்து மேரியோசவ் பொன்ராசா, திரேசா புஸ்பம் ஆகியோரின் அருமை மகனும், விக்ரர் ஜெயக்குமார், சாளெற் ஜெயந்தக்குமாரி, ஸ்ரீபன் ஜெயசீலன், கியூபேட் ஜெபசாந்தன், சாளெற் தூஷாந்தக்குமாரி, சாளெற் கிறிஷாந்தக்குமாரி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (24-09-92) இன்று பிற்பகல் 3.00 மணிக்கு இல. 3, கொய்யாத்தோட்டம் இல்லத்தில் இருந்து புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூசைப் பலியின் பின் கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

ச. இ. வேதநாயகம்

(3270)


---

# உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 23-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5809

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

27-7717, 27-6821, 24-4436, 26-2745, 27-4239, 24-4292, 26-9992, 24-4957, 27-4289, 41-8617, 41-9355, 41-2473 24-4153, 28-9186, 27-2088, 26-9283, 27-9033, 26-676.

---


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.